முருகப்பெருமான் துணை

**மகான் இசைஞானியர் நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**22.09.2023**, வெள்ளிக்கிழமை

1. தருமனே தவபலமிக்க அரங்கனே
   தரணியை ஞான உலகமாக்க
   ஆறுமுகப் பெருமான் ஞானமருளும்
   அரங்கமகா ஞான தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
   தெரிவிப்பேன் சோபகிருது தரிவை திங்கள்
   ஆசிபட பஞ்ச திகதி புகர் வாரம்
   (சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 05 ம் நாள், 22.09.2023, வெள்ளிக்கிழமை)
   அறிவுரை ஆசிதனை இசை ஞானியர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
   உண்மைபட உலக மக்கள்
   ஞானவானாகத் தேறி வாழ
   ஞானமருளும் அரங்கன் வழியே
4. வழியே உலகினை தருமபலமுற
   வழிநடத்தும் சிறந்த வழியாகும்
   வழிமொழிந்து உலக மக்களும்
   வகைபட ஏற்றுத் தொடர
5. தொடரத் துன்பம் விலகும்
   தீமைபலன் ஏதும் அனுகா
   இடர்களே இன்றிவாழ நேரும்
   எதிலும் வெற்றி எனும் நிலைகூடி
6. நிலைகூடி ஞானிகள் பலர்
   நினைக்கவே வந்தருளும்படி
   பிழையறத் தேறி வாழ்வில்
   பேரானந்த வாழ்வு அடையநேரும்

7. நேருமைபட வாழும் குணமும்
நீதிநெறி வழித் தொடர்ந்து
வறுமை பசிபிணி விரட்டி
வள்ளலாய் வாழும் நிலை அடைவர்
8. அடையவே மாயை நிறைந்த
அழிவைத்தரும் கலிகாலம் என்றாலும்
சோடை அனுகா போக்கி
சுபிட்சமுற வாழும் காலமாக மாற்றி
9. மாற்றி இனிதே உலகினில்
மகத்துவம் பல படைத்து
மாற்றம் தரும் மகான்களாக
மக்களுள் சிறந்தோராகத் தேறி
10. தேறியே உலகமாற்றம் தரும்
தேசிகனின் படைகளாகவே
மாறியே உலகினில் அற்புதம்
மண்ணுலகே வியக்க படைப்பர்
11. படைகள் நிறைந்த புவியாக
பண்பாளர்கள் குவிந்த புவியாக
சோடையின்றி உலகம் ஞானலோகம் ஆகும்
செப்பிய அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–